


**24. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் எரிசக்தி துறையில் தேர்வு செய்யப்பட்ட 401 பேருக்கு முதலமைச்சர் திரு. விஜய் பணி நியமன ஆணைகளை இன்று வழங்கினார்.

2. சுகாதார உணவு தயாரிக்க தெருவோர கடைகளுக்கு கடனுதவி திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

3. பெரம்பலூரில் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

4. பாஸ்போர்ட் சேவைகளை விரைவுப்படுத்தி வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

5. U.S. ஓப்பன் சூப்பர் பேட்மிட்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ட்ரீஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் எரிசக்தி துறை சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 383 உதவி பொறியாளர்கள், 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 பேருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. விஜய் இன்று வழங்கினார்.

சென்னை கலைவாணர் அரங்கில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார், மின்சார வாரியத்தில் நிலவும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளதே காரணம் என ஆய்வுக்கூட்டத்தின் மூலம் அறியப்பட்டதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நடப்பாண்டிற்குள் இத்துறையில் 15 ஆயிரம் பணியிடங்கள் நிரப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றார்.

தமிழகத்தில் 25 சதவிகித மின்மாற்றிகள் பழமையானவை என்றும், இதனை புதுப்பிக்க மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அருண் ராஜ்

தமிழகத்தில் தெருவோர கடைகளில் சுகாதார உணவு தயாரிக்க கடனுதவி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட உள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வத்துறை அமைச்சர் திரு. அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னை திருச்சி, மதுரை, சேலம், திருப்பூர் ஆகிய 5 மாவட்டங்களில் சாலையோர உணவு தயாரிக்கவும்,

ஆரோக்கியமான, சுகாதாரமான Food Streetக்களை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

பெரம்பலூரில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் பள்ளி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளுடன் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து அரசு பள்ளிகளில் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களை பெற்ற மாணாக்கருக்கும்,

100 சதவிகிதம் தேர்ச்சிப்பெற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் விருதுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் அமைச்சர் வழங்கினார்.

பெரிய வெண்மணியில் கட்டப்படும் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் விடுதி கட்டடப் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

அனைத்து துறை அலுவலர்கள் உடனான ஆய்வுக்கூட்டம் இடம்பெற்றது.

திருப்பத்தூரில் உலக போதைப்பொருள் தடுப்பு தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரவிக்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

2 ஆயிரத்து 500 மாணக்கர் இதில் கலந்து கொண்டனர்

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரசுரங்களும் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>ரமேஷ்</u>

திருச்செந்தூர் அருள்மிகு முருகன் திருக்கோவிலில் தரிசனத்திற்கான டிக்கெட் விலை உயர்த்தப்படவில்லை என மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் விலையை உயர்த்துவது குறித்து பக்தர்களிடம் கருத்துக்கள் மட்டுமே கேட்கப்பட்டதாகவும், பெறப்படும் கருத்துக்களுக்கு மாற்றாக எந்த முடிவையும் அரசு எடுக்காது எனவும் தெளிவுப்படுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>கண்ணதாசன்</u>

கவியரசர் கண்ணதாசனின் 100-வது பிறந்தநாளை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், தமிழ் மொழி, இலக்கியம், திரையுலகிற்கு அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளை போற்றுவதாக கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. விஜய் விடுத்துள்ள செய்தியில் காலங்களை கடந்தும், தலைமுறைகளை வழிநடத்தும் இலக்கிய பொக்கிஷங்களாக அன்னாரது படைப்புகள் திகழ்வதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

## பாஸ்போர்ட் சேவை தினம்

14-வது பாஸ்போர்ட் சேவை தினத்தை ஒட்டி பாஸ்போர்ட் ஆணைய அலுவலர்களுக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாஸ்போர்ட் சேவை இரண்டாவது கட்டத்தின் கீழ் சிப் பொருத்தப்பட்ட மின்னணு பாஸ்போர்ட் அறிமுகம், புதிய பாஸ்போர்ட் சேவை மையங்கள் மற்றும் அஞ்சல் பாஸ்போர்ட் சேவை மையங்களை திறப்பது, அதிகளவில் பாஸ்போர்ட் விநியோகிப்பது, இலகுவான பயணத்தை உறுதி செய்வது, உலகளாவிய வாய்ப்புகளுக்காக பாஸ்போர்ட் சேவையை விஸ்தரிப்பது, குடிமக்களுக்கு ஆளுமை வழங்குவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

பாஸ்போர்ட் சேவைகளை விரைவுப்படுத்தி வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக கூறினார்.

1967-ம் ஆண்டு கடவுச்சீட்டு சட்டம் இயற்றப்பட்டதை நினைவுக்கூறும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் 24-ம் தேதி இந்நாள் கொண்டாடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

## அர்ஜுன்ராம் மெஹ்வால்

கேந்திரிய வித்யாலயாக்களுக்கான 36-வது தேசிய இளம் நாடாளுமன்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கர் மற்றும் பள்ளிகளுக்கு நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் நாளை பரிசுகளை வழங்குகிறார்.

நாடாளுமன்ற போட்டி திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 200 பள்ளிகளுக்கு இடையே சுய ஒழுக்கம், மாறுபட்ட கருத்துக்களை ஏற்கும் மனப்பான்மை, ஜனநாயக

வாழ்க்கை முறையின் நற்பண்புகள் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போட்டி நடத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

H.D. குமாரசாமி

நாட்டின் எஃகு துறை எதிர்கால வளர்ச்சிக்கு மின்னணு தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. H.D. குமாரசாமி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் எஃகு துறை மின்மய நிலைப்பாடுகள் குறித்த கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், இத்துறையில் இந்தியாவின் வலுவான வளர்ச்சியை எடுத்துரைத்தார்.

2018-ம் ஆண்டிலிருந்து உலகளாவிய இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தி நாடாக இந்தியா தனது நிலையை பராமரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு கச்சா எஃகு உற்பத்தி கடந்த 3 ஆண்டுகளில், 13 சதவிகிதம் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

செயற்கை நுண்ணறிவு, இயந்திரமயம், ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பங்களால் உற்பத்தி, தொடர்ந்து உயர்ந்து வருவதாக கூறினார்.

இதனால் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு பயன்பாடு அதிகரித்து விலை குறைப்பிற்கு வழிகோலப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஊரக வளர்ச்சிக்கான மத்திய அரசின் தொலைநோக்கு திட்டத்தின் கீழ் எஃகு துறை பங்குதாரர்களுக்கு இக்கூட்டம் புதிய வாய்ப்புகளுக்கு திறவுகோலாக அமைந்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருச்சி மாவட்ட சமூகநலன் மற்றும மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம்! பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு, கல்வி, பாலின விகிதத்தை மேம்படுத்தும் நோக்கில் எல். இ. டி விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை ஆட்சித்தலைவர் திரு. பிரத்தீக் தாயள் இன்று தொடங்கி வைத்தார்.

இவ்வாகனம் முசிறி, தொட்டியம், மணப்பாறை, புள்ளம்பாடி உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் பயணித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

எம்.ஜி.ஆர்

தமிழ்நாடு அரசு M.G.R. திரைப்படம், தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில், நடப்பு கல்வியாண்டில் இளங்கலை காட்சிக்கலை, பாடப் பிரிவுகளில் சேர்க்கைக்காக விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 27-ம் தேதி மாலை 5 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக செய்தி மக்கள் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நிரந்தர மண்புழு உற்பத்தி கூடம் அமைக்க 50 சதவிகித மானியம் வழங்கப்படவுள்ளதாக தோட்டக்கலை துணை இயக்குநர் சிந்தியா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர் சுமன்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில் ஆனித் திருவிழாவின் முக்கிய நிகழ்வான ஸ்ரீபெரியாழ்வார் பாரம்பரிய செப்புத் தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

கலிபோர்னியாவில் நடைபெறும் U.S. ஓப்பன் சூப்பர் பேட்மிட்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ட்ரீஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்றில் ட்ரீஸா இணை ஸ்பெயின் இணையை 21-12, 14-21, 21-13 என்ற செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பல்கேரியா சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் முதல்சுற்றில் இந்தியாவின் பிரஜ்வால்தேவ், நிதின்குமார் சின்ஹா இணை – ஜப்பான் இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖